## அன்பின் வாசக நெஞ்சங்களே!

மாசி மாதத்தில் எமக்கு முக்கியமாக தூய லூர்து மாதாவின் பெருவிழா மனக்கண் முன் வருகின்றது. பிரான்ஸ் நாட்டிலே லூர்து என்னும் கிராமத்தில் எம்முடைய மரியன்னை, பெர்ணடெத் என்கின்ற ஏழை சிறுமிக்கு தன்னை வெளிப்படுத்தி காட்சி கொடுக்கின்றார் என்ற நிகழ்வு எமக்குத் தரப்படுகின்றது. அடிப்படையிலே மரியன்னை அந்த ஏழை சிறுமிக்கு காட்சி கொடுத்த செய்தியாக வழங்கியது என்ன என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். கி.பி.1858ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதியன்று இக்காட்சியானது இடம்பெற்றது. விறகு சேகரித்துக் கொண்டிருந்த சிறுமிக்கு காட்சி கொடுத்தது மிகவும் அந்த சிறுமியை அதிர்ச்சி கொள்ளச் செய்தது. காட்சிக்குப் பிறகு அந்த சிறுமியின் அனுபவம் எப்படி இருந்தது என்றால் “இளமைத் தோற்றத்துடன் பெண் காணப்பட்டாள் என்றும், கையில் ஒரு செபமாலையுடன் இருந்தார் என்றும் பகிர்ந்துகொண்டார். பின்னர் மரியன்னை அவளுக்கு தோன்றிய போது பெர்னடெத் அந்த தாயின் பெயரைக் கேட்டார். அப்போது “நாமே அமல உற்பவி” என்று தன்னை மரியன்னை வெளிப்படுத்தினார். 18வது முறையாக மரியன்னை பெர்னடெத்துக்கு காட்சி கொடுக்கும் பொழுது பாவிகளுக்காக மன்றாடும் படியாகவும், செப, தப முயற்சிகள் செய்யும் படியாகவும், இந்த இடத்தில் பாவிகளுக்காக மக்கள் செபிக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். பிரான்ஸ் நாட்டில் ஆண்டு தோறும் பல இலட்சம் மக்கள் திருயாத்திரை செய்வதையும் மக்கள் இன, மத, மொழி பேதமின்றி மனம் மாறி இறைவனைப் புகழ்வதையும், மரியன்னை பெர்னடெத்திற்கு காட்டிய அந்த ஊற்றிலிருந்த குணமாகுதல் இடம் பெறுகிறதையும் பார்க்கும் பொழுது இறை அருளின் ஊற்று நோயாளர்களுக்கும், பாவிகளுக்கும் வற்றாமல் கிடைத்துக் கொண்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது. நாம் வாழும் உலகம் நுகர்வு காலச்சக்கரம், ஆரம்பவாழ்வு, உலகபோக்கு, வன்முறையான கலாச்சாரம் போன்றவற்றால் மூழ்கி அழிந்து கொண்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. ஒவ்வொரு பாவியும் இறைவனைத் தேடிச் செல்லும் பொழுது இயேசு சந்தோஷமடைகின்றார். இதற்காக நாம் ஒவ்வொருவரும் செபிக்க வேண்டும். அதற்குத் தான் மரியன்னை செபமாலை என்னும் அருமையான கருவியை எமக்குக் கொடுத்திருக்கின்றார். ஒவ்வொருநிமிடமும் ஒரு பாவிநரகத்திற்கு செல்லக்கூடிய வாய்ப்பு உண்டென்று திரேசம்மாள் தன்னுடைய அனுபவத்தால் கூறுகின்றார். ஆனால் நாம் ஒரு செபமாலை சொல்லுகின்ற போது அதே பாவி இறைவனை நோக்கி மனம் திரும்பக்கூடிய வாய்ப்பு நிறைய இருக்கின்றது என்று தன்னுடைய இறை அனுபவத்தில் குறிப்பிடுகின்றார். ஆகவே இவ்வருடத்தில் பாவிகளுக்காகவும், வாழ்க்கையில் துன்பப்படுகிறவர்களுக்காகவும் ஒவ்வொரு நாளும் செபமாலை ஓதுவோமா? எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரே கருத்துக்காக செபிக்கும் பொழுது இறைவனின் இரக்கம் இன்றும் ஆறாக பாய்ந்து ஓடும் என்று இறை அனுபவம் கூறுகின்றது. லூர்து கெபியின் அனுபவம் எம் ஒவ்வொருக்கும் கிடைக்கவேண்டும் என்று மரியன்னை எம்மைப்பார்த்து கேட்டுக் கொண்டே இருக்கின்றார்.

. செபியுங்கள்
- தபம்
- செய்யுங்கள் நல்லசெயல்களைசெய்யுங்கள்

இவை எம்முடைய இவ்வருட தீர்மானங்களாக இருக்கட்டும்.

அருட்பணி யூட் நிக்ஸன்
Parish Priest
Our Lady of Deliverance Tamil Catholic Mission
.Montreal (QC), Canada